உ

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர்

இரட்டைமணிமாலை

ஸ்ரீ கல்யாணசுந்தரர் பதிகம்,

ஆண்டார் பதிகம்.

OFFICE OF T… …RAR …
18 AUG 1920
MADRAS

இவை

நல்லூர்

பிரும்மஸ்ரீ இராமநாதையரவர்களால்

இயற்றப்பெற்றும்

இராயவேலூர் போலீஸ் டிரெயினிங் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

மகா-ள-ள-ஸ்ரீ சபாபதி பிள்ளையவர்களால்,

பார்வையிடப்பெற்றும்

கும்பகோணம் நேட்டிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யரவர்களால்,

சோதிக்கப்பெற்றும்.

நல்லூர்

மகா-ள-ள-ஸ்ரீ வேங்கடசாமித் தொண்டரவர்களால்

கும்பகோணம்

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது

ரௌத்திரி-௵

122586
600 008.

OFFICE OF T... 18 AUG 1920

உ

வெற்றிவேலுற்ற துணை.

திருநல்லூர் இரட்டை மணிமாலை.

காப்பு.

வெண்பா.

சீர்மேவு நல்லூர்ச் சிவ சங்கரனையான்
பார்மேவிப் போற்றிப் பணிவதற்குக்—கார்மேவுங்
காசிக் கணபதியைக் கைகூப்பி யெந்நாளும்
பூசித்துப் போற்றினேன் போய்.

நூல்.

பொன்னங் குவடுவெளைப் பூதமேற் போந்ததிரு
நன்னங் குவட்டுடை நல்லூரா—முன்னம்
படைத்தா யளித்தாய்ப்பின் பாங்கொளித்தா யெல்லாம்
முடைத்தாய வுன்றன் செயல்.

கட்டளைக்கலித்துறை.

செய்வா யனத்துயிற் சீரார்த் திருநல்லூர்ச் சென்றுநின்
மெய்வாய் மனஞ்சேர் மலர்கூவிளங்கொடு மென்கழலிற்
பெய்வா யுனக்குப் பிறப்பேது கண்டாய்ப் பிறங்கொளிசேர்
தெய்வாதி தெய்வத் திருக்கலி யாணரைச் சேரநெஞ்சே.

சேர்ப்பேனோ சேவடியிற் சென்னிதனைவைத்துப்
பார்ப்பேனோ பாவி பழவினையைத்—தீர்ப்பேனோ
நன்னாளே யிந்நாளா நல்லூராண் டாரென்று
சொன்னாலே சோரும் வினை.

வினைதந்த விந்தவெறியாக்கை சோர்ந்து விழுவதன்முன்
னெனைதந்த வுன்னையா னிங்குகண்டே னேற்றுவாகனத்தி
னனைதந்த மேனியு மார்மதி வேணியு மான்மழுவும்
புனைதந்தி யாடையும் பூங்கழலு னல்லூர்ப் பொன்வரையே.

பொன்னும் புவியும் புகழ்மனையும் போற்றிகிலே
னின்னிரு தாளினினைவொழியே—னென்னை
விடுவையோ நல்லூர் விமலனை கூற்றன்
றொடுவனே தொன்னுண் மறந்து.

மறந்தே னிலைமா மதிகங்கை சூடும் மணிமுடியோய்
பிறந்தே னிலைபெற்ற பேரருளாற் பின்னையோரிடத்திற்
சிறந்தேன் சகம்புகழ்ச் சீர்தருநல்லூர்ச் சிவன்பதத்தில்
திறந்தேன் றிரிதருங் கண்ணுக்குக் கண்ணிட்ட சித்திரமே.

சித்துரு வாகவே சேர்ந்த வுயிரனைத்து
மத்திரு நல்லூ ரகம்பாராய்—பத்தி
கொடுத்தோன் கொடும்பொருட் கொண்டுவகை யான்முன்
னடித்தோனை நாடுங்க ணல்.

கண்ணுளா ரல்லாருங் காதலா நல்லூர் கருதியவ
ரெண்ணுளா ராவ ரிறந்துளா ரேனு மிறப்பறியா
விண்ணுளா ராவர் விரிஞ்சியு முன்னை விரும்பிலரேல்
மண்ணுளா ராகி மதியிழக் தீங்கு மயங்குவரே.

வரைமேவிக் கானமேவி வான்கழனி மேவித்
திரைமேவி நாளுந் திரிந்தே—னிரைமேவி
நாடித் திருநல்லூர் நற்றவத்தோர் தன்பக்கற்
கூடிக்கொள்ளாமற் கழல்.

கழலைத் தரித்தரங் காடியபாதங் கருதியவ
ரழலைத்திரித்தை யிருபத் துமேதஞ்செய்தைந்த ருவி
னிழலைத் தரித்த வரும்பத னேரார் னெரிசுரிபூங்
குழலைத் தரித்தாட் கிடந்தந்த நல்லூர்க் குலவுவரே.

வரமிக்கேம் வாழ்வில்யாம் வான்மிக்கேஞ் செல்வஞ்
சிரமிக்கே மென்றுஞ் செருக்கேல்—புரமிக்க
நன்னகை யாற்செற்று னல்லூரன் மான்மலரோன்
புன்னகத்தைப் போக்கினுன் முன்.

முன்னங்கை தாழ முடிசெஞ்சடைதாழ மூரிவரு
னன்னங்கை தாழ நகத்தா ளிடைதாழ நஞ்சமணர்
சின்னங்கை தாழக் குழைதாழச் சீர்கட மாடியவா
வின்னங்கை தாழ விரப்பேனே நல்லூரிறையவனே.

இறையே பொழுதேனு மெண்ணு னல்லூர்
மறையு மறியாமா தங்கன்—குறைதன்னை
நீக்கி நிலவரையி னீழேி நின்றிருக்க
வாக்கி யருள்வா னறி.

அறிந்தாங் குறுமுனிக் காமணக் கோலம்போ ராய்ந்திரவி
லிறிந்தாங் கரியொடு மேகிய பார்த்த னனைதனக்கா
செறிந்தாங் கெழுகடற் சேர்தரு நல்லூர்ச் சிவனருளை
யெறிந்தாங் குறும்பய னென்னே தெரிந்து மலைகின்றையே.

மலைமே னிவந்த மணிமுடிவா னத்திற்
கலைமேவு னல்லூர்க்கல் யாணர்—முலைமேவு
பாலர்க்காப் பாற்கடலைப் பாங்களித்த பண்ணவனுங்
காலர்க்காங் காலனே தான்.

தானந் தகன்கண் டயர்ந்தாவி சோர்ந்து தவிக்கவனம்
பானந்தம் பாங்குறக் கக்கியே விக்கற் பரவுமுன்ம
யானந்தகனக் கனலாறி மண்ணின் மடியுமுன்சி
தானந்த மாகியிருப்பார் தவத்தோர்நல் லூரகத்தே.

அகலிட மெங்கு மலைந்தே னறிந்தேன்
புகலிடங் கண்டேன் புலையேன்—பகலிரவாய்
நல்லூ ரரனே நமச்சிவா யாவென்னுஞ்
சொல்லே தருமெய்ச் சுகம்.

சுகந்தருபாதஞ் சுரை கொண்டு செல்பதஞ் சூழ்பாவை
யகந்தரு பாத மரசர் முடிப்பத மாலறியா
துகந்தரு பாத முயர்நட்ட மாடியங் கூன்றுபத
முகந்தரு நாளிலு மோங்கிடு நல்லூருறுபதமே

உற்றறிந் தேனென்ற வுபநிடத மங்காளிற்
செற்றுச் சுனகனுய்ச் சென்றதுவு—நற்றி
நல்லூர் தலத்தமர்ந்த நாய்பெற்ற நற்கதியு
மெல்லாருங் கண்டா ரிருந்து.

இருக்காதி வேதத் திசைகண்ட ராவணன் றன்பலத்தின்
பெருக்கா லெடுக்கப் பெருவிர லூன்றிய பிஞ்ஞகனே
திருக்கா விரிக்கரை மேவிய நல்லூர்த் திகம்பரனே
யிருக்கே னினியுன் மலர்ப்பதங் காணு தொருதினமே.

முற்றும்.

(92:41)
4120
172536.
600 006

திருநல்லூர் கலியாண சுந்தரர் பதிகம்.

——()——

காப்பு.

சீதக் கலையைச் செழுங்கோட்டாற் சேர்த்துயர்த்தி
வாதப் புழைக்கரத்தால் வாய்மூடிப்—பூதக்
கணத்தாட்டைக் கண்டுகளித் தாடி யானைத்
துணைத்தா ளெனக்குத் துணை.

பொன்மேவு மொளிச்சிமயப் புகழ்கைலை வடவடிக்கீழ் வித்தியாபீடத்
தென்மேவு முகமலர்ந்து தெளிவித்தாய்தத்து வத்தைத் தெரிந்தார்
நால்வர்
நன்மேவு நல்லூரி நாநிலத்தார்பாச நன்றே நீக்க
கன்மேவுந் தென்கைலைக் கலியாண சுந்தரவென்கருத்தின் வைப்பே.

மெய்வண்ண மறியாமன் மேதினியின் மாதரெனை மதிமயங்கச்
செய்வண்ண முயிரென்றுஞ் சேர்வண்ணங்கைப் பொருளைச்சேரக்
கொள்ள
பொய்வண்ணம் புகழ்க்துறைப்பள் புலைவண்ணப் பாத்தியர்பாற்
போகாதேனுக்
கைவண்ணமாயமர்ந்த கலியாண சுந்தரவென் கருத்தின்வைப்பே. 2

பணங்கொண்டசடை முடியும் பார்ப்பதியும் பனிமதியும் பாவாமற்போய்
மணங்கொண்டு வரவடிமை வழக்குறைத்ததிருவுருவை வாழ்த்தற்கிங்ஙன்
நிணங்கொண்ட புழுவுடம்பே னினைத்ததுவுந்துதித்தது வுனிக்திப்பேயாம்
கணங்கொண்ட காடுடையாய்க் கலியாணசுந்தரவென் கருத்தின்வைப்பே. 3

தண்டிருந்ததாரணியுந் தாழ்வில்லாத் தருமனையுந் தனயன்முரங்
கொண்டிருந்த கோமகனுங் குறித்தகடையக்காளிற் கூற்றன்கூவப்
பண்டிருந்த பதியிழந்து பழவினைமேற்கொண்டுதனிச் செல்லப்பார்க்க
கண்டிருந்துங் கலங்குவதென் கலியாணசுந்தர வென்கருத்தின்வைப்பே. 4

நாவண்ணங்கண்டுமுன் னல்லூரின் வாவாவென் றுகீசரக்காப்
பூவண்ணப்பதமளித்தாய்ப் புனிதவமர் நீதியின்பாற் புகழ்கவுபீனந்
தாவண்ணந்தந்து மனைத்தனந்தாரந் தனையனொடுந் தராசிலேற்றி
காவண்ணங் காத்திருந்த கலியாணசுந்தர வென்கருத்தின்வைப்பே. 5

உலகமெலா மொடுங்குங்காலுனை யன்றி யுறுபொருளொன் றுங்குக்காணே
மலகில் பலவுயிராகி யவை காணாப்பரமாகி யத்வதீய
விலகவிட மில்லாகி வேதத்தினடுவாகி யிருந்தனல்லூர்
கலகமிடங்காதலெனோ கலியாணசுந்தர வென்கருத்தின்வைப்பே. 6

ஐயவரினாலான வுடலறுவருமே குடிபுக்கா ரஞ்ஞானத்தா
னைவனகனாடாமனா டெல்லானாடிமதி மேகமென்ன
மைவரைமா மாயைதனை மாற்றவகையறியாமன் மதிமயங்குங்
கையனைநீ கார்த்தருளாயக் கலியாணசுந்தர வென்கருத்தின்வைப்பே. 7

உன்றனையல்லொரு பொருளுமுண்மையிலையே யதுவுமுன்னாலாடுங்
தன்றனிருவினை தந்தபடி சீவன் றாரணியிற்றாரம்பற்றி
நின்றலைய நிருமித்த நிர்க்குணமே நிராமயமே நீயேதந்த
கன்றிருந்து கதறுவதென் கலியாணசுந்தர வென்கருத்தின்வைப்பே. 8

நினைவரிய மாயையெனை நீக்கமற நின்றுன்னை நினையாவண்ண
மெனையிகழும்படி யுலகிலே வியவாறென்னோகா ணீசாவுன்றன்
றனையறியத்தத்து வத்தைத் சாந்தகமே பிரமமெனத்தானாய்நிற்கக்
கனைகெழுமு கங்கை தவிழ் கலியாணசுந்தர வென்கருத்தின்வைப்பே. 9

எண்ணறிய வுலகமெலா மிமைப்பொழுதிற் படைத்தத னுளேகிப்பின்னு
னண்ணலனாய் நற்றவத்தோர் நடுவமைந்து நடமாடுநாதாவேற்கு
பெண்ணலியாண் பேதமுறப்பிறவாத பேரின்பப் பெற்றிதாராய்க்
கண்ணொளியாய்நின்ற திருக்கலியாணசுந்தர வென்கருத்தின்வைப்பே 10

அங்கையினிற் சங்குடையனருமறைய னாடுபல நாளாய்ந்துதேடி
பங்கயமாபாத முடிபாராமற் பரிதவிக்கப் பார்த்தபின்னுஞ்
சங்கையெனக் கில்லையினிச் சங்கரனாயுலகுதனி நின்ற கோவே
கங்கைகலைதலைக் கணிந்த கலியாண சுந்தரவென் கருத்தின்வைப்பே. 11

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.

உ

வெற்றிவேலுற்ற துணை.

திருநல்லூர் ஆண்டார் பதிகம்.

காப்பு.

திருக்கலி யாணரைச் சிந்தித்து நல்லூர்
பொருப்பிருந்து போற்றிப் புகழ—வுருபலவாயச்
சுற்றி யுலகெங்குஞ் சூழ்ந்துவருஞ் சூர்தடிந்த
வெற்றிவே லுற்ற துணை.

அலையெறி கடல் சூழ்பூவி லமைந்த பேரன்பு பூண்டு
நிலைநெறிப் பத்தினினாருனிண்ணய மறியத்தேடித்
தொலைதனைத் தூக்கித்தோமிற் றொண்டரிற்றாமனத்தன்
னிலையமர் நீதிதானென்றாண்டவ னல்லூரானே. 1

செம்மை கோவணமோர் தட்டிற்சேர் பொருண்மற்றத்தட்டிற்
றம்முடை தட்டுத் தாழதரா சினைக்கண்டுவெட்கி
யம்மம்ம விவனையொப்பா ரவனியினில லென்றாங்கே
நம்மடிவா வென்னப் போராண்டவ னல்லூரானே. 2

அந்தாத்தவர்கட் கெல்லா மவனியிற் றொண்டர்கெல்லா
னிந்தையிற் பத்திகாண்பான் னிருமித்த துலையிலிட்டு
சிந்தையாற் சேரப்பார்த்துச் சேரமர் நீதியோடே
யந்தமின் முத்திதந்தேயாண்டவ னல்லூரானே. 3

நாரணனுதலின் மன்னரமர்க் களந்தன்னிற் சோரி
பூரணமாகா வோட்டிற புனிதன்றன் னன்பையேற்றுத்
தோரணத்தரா சில்வாங்கித் தொண்டரிற் றலைவனுக்கி
யாரணன் பூரணஞ் செய்தாண்டவ னல்லூரானே. 4

அற்றவற் கீவதெல்லாமழி பொருளாக வெல்லா
முற்றநிற் குதவவே ரேருறு பொருளில லென்றான்மப்
பற்றறுத் தமர்நீதிப் பேராண்ட கையன்போடிய
குற்றமிலேற்ற ஞ்ஞான்றே யாண்டவ னல்லூரானே. 5

குறிப்பறிந் தெதிரிற்சென்று கோதிலாவன்பு தேக்கி
யுறபபெரும் பொருளை யெல்லாமுற்றவர்க் கீந்தாநீதி
சிறந்தவர் தன்பாலேற்றக் சீர்த்தியென் றவனைநாடி
யறிந்தவன்றன் னில்லேகியாண்டவ னல்லூரானே. 6

அளவிலா மாயையெல்லா மாற்றினமமர் நீதிப்பாற்
களவினாலாற்றற் காண்பான் கவுபீனமவர்மாட்டுய்த்து
வளமிகு பொருண்மற் றெல்லா வாரியே யதற்கீடாக்கி
யளவறிந்தாங்கஞ் ஞான்றேயாண்டவ னல்லூரானே. 7

அம்மையோடகலச்செய்துஉ மாணியாயக் கபாலமேந்தி
செம்மை சேர்வணிகன் றன்பாற் சேர்ந்தவன் பிச்சனென்றூற்
சும்மை யோடவனைக் கொண்டான் சோரற்கைப்பட்டமேலாத்
தம்முடை பொருளைக் கண்டானாண்டவ னல்லூரானே. 8

நல்லவர்ச்சேர்ந்தோரெல்லா னலமிக்கா ராவரென்றும்
சொல்லவும் வேண்டுங்கொல்லோ சுருதியிற் பரக்கக்காண்பாம்
தொல்லடி யமர்நீதிப்பாற் றேன்றிடக் கண்டோமிப்பால்
நல்லிடம்வேறு முண்டோ ஆண்டவ னல்லூரானே. 9

சொல்லிலுஞ் சொல்லின் மிக்கசுருதியிலுஞ்சூழவிந்த
தொல்லுல கெங்குந்தானே நிற்பவ னாதலானே
பல்லுயிர்ப் பரவியெங்கும் பார்த்தமர் நீதிதன்னை
யல்லிலும் பகலிலும்பார்த் தாண்டவ னல்லூரானே. 10

எண்ணான் குதருமத்தொன் று மியற்றினாரில்லா ரேனு
முண்ணம லன்பு பூண்டோர் திவசமங்குறு வாராயின்
விண்ணோர் வந்தெதிரிற் சொல்லவிரி புவியாண்டு வாழ்ந்து
கண்ணார்பின பவத்தை நல்லூர்காடினர் நன்குவாழ்க. 11

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.

Q2:417
1920
172536
சென்னை-600 008.